இந்திய உச்ச நீதிமன்றம்

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு

குற்றவியல் மேல்முறையீடு எண் 456/2019

(சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) எண் 208/2019-இலிருந்து எழுகிறது)

பெரியசாமி மற்றும் பலர் ... மேல்முறையீட்டாளர்கள்

-எதிர்-

எஸ். நல்லசாமி ... எதிர்மேல்முறையீட்டாளர்

தீர்ப்புரை

மாண்புமிகு நீதியரசர் திரு. உறமந்த் குப்தா:

உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம், 1973 (சட்டம்)-இன் பிரிவு 319-இன் கீழான விண்ணப்பத்தை 27.02.2015 அன்று தள்ளுபடி செய்து, மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவரால் (நடுவர்) பிறப்பிக்கப்பட்ட உத்தரவை நீக்கறவு செய்து, 28.08.2018 அன்று மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை எதிர்த்தும், மேல்முறையீட்டாளர்களை குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக சேர்ப்பதற்கு உத்தரவிடவும் மற்றும் சட்டத்திற்குட்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுக்கவும் தற்பொழுதைய மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. முதல் தகவல் அறிக்கை பதிய உத்தரவு அளித்து, எஸ். நல்லசாமியால் (புகார்தாரர்) தாக்கல் செய்யப்பட்ட நீதிப்பேராணை மனுவில் 26.05.2011 அன்று மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவைத் தொடர்ந்து, இ.த.ச., பிரிவுகள் 147, 448, 294(பி) மற்றும் 506-இன் கீழான குற்றங்களுக்கு முதல் தகவல் அறிக்கை 29.05.2011 அன்று பதிவு செய்யப்பட்டது.

3. புகார்தாரர் 1998-ஆம் ஆண்டில் தங்கமணி என்பவரை மணம்புரிந்தார். புகார்தாரரின் மனைவியானவர் பெரும்பாலும் அவருடைய தந்தையின் வீட்டில்தான் இருப்பார், எப்போதாவதுதான் அவர் சாணார்பாளையத்திற்கு வருவார் என சொல்லப்படுகிறது. அவர்களுக்கு லோகநித்யா என்ற மகள் இருந்தாள். அவரது மனைவி பாகப்பிரிவினை வழக்கை தாக்கல் செய்ததாகவும், அவருடைய மனைவியும், மகளும் அவருடைய வீட்டிற்கு வந்ததும் ஏற்பட்ட சமரசத்தைக் கருத்திற்கொண்டு, அது தள்ளுபடி செய்யப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், இன்னமும் அவரின் மனைவி ஒவ்வொரு நாளும் சண்டையிடுவதையே வழக்கமாக்கிக் கொண்டார். மகள் கழனிபுரத்திலுள்ள பி.கே.பி. சுவாமி மெட்ரிக்குலேஷன் பள்ளியில் சேர்க்கப்பட்டாள், ஆனால், மகளை தேர்வு எழுத மனைவி அனுமதிக்காமல், எல்லபாளையத்திற்கு சென்றுவிட்டார். அவருடைய மாமியார், மாமனார் மற்றும் மைத்துனர், தங்கள் வீட்டு மகள் அவருடன் வாழவரமாட்டார் எனவும், வாழ்க்கை செலவுத்தொகையின்பொருட்டு ரூபாய் 30 இலட்சத்தை கோரியும், இல்லையெனில், அவருக்கும், அவருடைய தாயாருக்கும் எதிராக வரதட்சணை வழக்கு தொடுக்கப்போவதாகவும் மிரட்டினர்.

4. அவர் நஞ்சப்பன்கவுண்டனூரிலுள்ள வீட்டில் இருந்தபோது, 05.05.2011 அன்று காலை சுமார் 11.00 மணியளவில், அவருடைய மாமனார் இராமலிங்கம், மாமியார் இலட்சுமி, மைத்துனர் செந்தில்குமார், மனைவி தங்கமணி மற்றும் பிற உறவினர்கள் (15 பெண்கள் மற்றும் 35 ஆண்கள்) வாகனங்கள், அதாவது, டி.என்.-33-ஏ.எஸ்.-5695, டாட்டா ஏ.சி.இ. டி.என்.-33-ஏ.டி.-4640 மற்றும் டாட்டா 407 டி.ஏ.இ.-9996 என்ற பதிவு எண்கள் கொண்ட மாருதி வேன்களில் வந்து, வலுக்கட்டாயமாக அவருடைய வீட்டில் நுழைந்து அவரை திட்டினர். இந்த மக்கள் கடப்பாரை, கத்தி மற்றும் இரும்பம் போன்ற ஆயுதங்களை வைத்திருந்தனர். அவர்கள் வாழ்க்கைச் செலவுத்தொகையாக ரூபாய் 30 இலட்சத்தைக் கோரினர். அக்கூட்டத்தில் இருந்த நபர்களில் ஒருவர், அவர்களிடம் பேசவேண்டாம் என்றும், அவர்களை கொல்லும்படியும் கூறி தூண்டினார். அந்த நபர்கள் அரிவாள்களுடனும், கொம்புகளுடனும் அவர்களை நோக்கி ஓடிவந்தனர். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அனைவரும் வீட்டைப் பூட்டும்படி கத்தினர் மற்றும் டெம்போ வேனிலிருந்த மஞ்சள் மூட்டைகளை எடுத்துச்சென்றுவிட்டனர்.

5. அந்த மு.த.அ.-இன் அடிப்படையில், 29.05.2011 அன்று புகார்தாரரின் வாக்குமூலத்தை புலன்விசாரணை அலுவலர் பதிவுசெய்தார். ஆனால், தற்போதைய மேல்முறையீட்டிலுள்ள மேல்முறையீட்டாளர்கள் எவரையும் குறித்து மேற்படி வாக்குமூலத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. புலனாய்வின்போது தொடர்புடைய மற்ற சாட்சிகளின் வாக்குமூலங்களிலுங்கூட, புகார்தாரரை தாக்கி, அவருடைய வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்ததாகச் சொல்லப்பட்ட கூட்டத்தின் பகுதியினராக இருந்த நபர்களாக மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள் வெளிப்படுத்தப்படவில்லை. புலன்விசாரணை முடிந்தபிறகு, 09.11.2011 அன்று குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேருக்கும் எதிராக சட்டப்பிரிவு 173-இன் கீழ் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

6. புகார்தாரர், சட்டப்பிரிவு 173(8)-இன் கீழ் மேல்விசாரணைக்காக கற்றறிந்த விசாரணை நீதிமன்றம் முன்பு விண்ணப்பம் தாக்கல் செய்தார். மேல்விசாரணையானது, புலன்விசாரணை அலுவலரால் மட்டுமே கோரப்படமுடியும், புகார்தாரரால் அல்ல என்ற காரணத்தின்பேரில் மற்றவற்றிற்கிடையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களால் அந்த வேண்டுரை எதிர்க்கப்பட்டது. அந்த விண்ணப்பமானது, 30.07.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்பின்னர், அவருடைய வீட்டிற்குள் திடீரென நுழைந்து அவரை தாக்கிய கூட்டத்தின் பகுதியினராக மேல்முறையீட்டாளர்களின் பெயர்களை வெளிப்படுத்திய புகார்தாரர், 26.12.2013 அன்று அ.சா.1-ஆக முன்னிலையானார். அரசுத்தரப்பானது, அ.சா.2 லோகநாயகி (புகார்தாரரின் தாய்) அ.சா.3 முருகையன் மற்றும் அ.சா.4 ஜெகதீசன் (புகார்தாரரின் அண்டை வீட்டார்) ஆகியோரையும் விசாரித்தது.

7. இதன்பின்னர், விண்ணப்பத்தில் கூடுதல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்ட 20 குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கும் அழைப்பாணை விடுக்க சட்டப்பிரிவு 319-இன்கீழ் விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டது. மெட்ராஸ் உயர் நீதிமன்றம் முன்பு தாக்கல் செய்யப்பட்ட குற்றவியல் மு.ம. எண் 1680/2012-இல் புகார்தாரரால் கோரப்பட்ட இதேபோன்ற பரிகாரம் 21.02.2012 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது என்ற அடிப்படையில் அவ்விண்ணப்பம் மற்றவற்றுக்கிடையில் எதிர்க்கப்பட்டது. அதன்பின், புகார்தாரர் சட்டப்பிரிவு 173(8)-இன்கீழ் ஒரு மனுவைத் தாக்கல் செய்துள்ளார், அது 30.07.2013 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக கருதப்பட்டவர்களின் பெயர்கள் முதல் தகவல் அறிக்கையிலும் வெளியிடப்படவில்லை, புலன்விசாரணையின்போதும் வெளிச்சத்திற்கு வரவில்லை என்பதையும் சுட்டிக்காட்ட

வேண்டும். இந்த அடிப்படையில்தான் கற்றறிந்த நடுவர், கூடுதல் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக சேர்க்கப்பட்ட மேல்முறையீட்டாளர்களுக்கு அழைப்பாணை அனுப்ப மறுத்து 27.02.2015 அன்று உத்தரவொன்றைப் பிறப்பித்தார்.

8. குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக கருதப்பட்டவர்கள் வெவ்வேறு கிராமங்களிலிருந்து வந்துள்ளனர் என்பதையும், அரசு வழக்குரைஞர், குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக கருதப்பட்ட 20 நபர்களின் தந்தை பெயர் மற்றும் முகவரிகளை எவ்வாறு அளித்தார் என்பதை வெளிப்படுத்தவில்லை என்பதையும் விசாரணை நீதிமன்றம் கண்டறிந்து கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்ததாவது:

> "6..... இறுதி உத்தரவில் இருந்த 11 பேர்களின் பெயர்களும், வேறுபிற 15 பெண்களும், 35 ஆண்களும், 3 வாகனங்களும், இரு சக்கர வாகனங்களும் புகாரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன. அதனடிப்படையில் பிரிவுகள் 147, 448, 294(பி), 506(2)-இன் கீழ் இறுதி உத்தரவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், மஞ்சள் மூட்டைகளை திருடியது குறித்து புகார் ஏதுமில்லை. 11 பேர்களின்மீது மட்டுமே இறுதி அறிக்கை முற்படுத்தப்பட்டுள்ளது. மனுதாரருடன் சேர்த்து மொத்தம் ஆறு சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய அனைத்து வாக்குமூலங்களிலும், அந்த 11 பேர்களின் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளன. அதனால் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கும் தேதிவரையிலும், மற்ற 20 பேர்கள் குறித்து விவரங்கள் அல்லது தகவல் அறியப்படவில்லை.
>
> 7..... மேலும், கு.வி.மு.ச., பிரிவு 319-இன்கீழ், வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும்போது, முறையான சான்று அல்லது சாட்சியத்துடன் ஒரு நபர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் பட்டியலில் அந்நபரை சேர்க்கவும், விசாரணைக்காக அந்நபரை கைது செய்யவும் நீதிமன்றம் உத்தரவிடலாம். ஆனால், ஒரு வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவராக ஒரு நபரை சேர்க்க வேண்டுமெனில், அந்நபரின் பெயர் மற்றும் விவரங்களை தெரிவிப்பது மட்டுமே போதுமானதல்ல. ஆனால், அவர் என்ன குற்றம் புரிந்துள்ளார் என்பதை நிச்சயமாகக் குறிப்பிடப்படவேண்டும். நீதிமன்றமானது ஐயப்பாட்டின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் பட்டியலில் அந்நபரைச் சேர்க்கக்கூடாது."

9. உயர் நீதிமன்றம் முன்பு, புகார்தாரரால் சீராய்வு மனு மூலமாக மேற்படி உத்தரவு எதிர்க்கப்பட்டது. உயர் நீதிமன்றம் சீராய்வு மனுவை ஏற்றுக்கொண்டு, மற்றவற்றிற்கிடையில் கீழ்கண்டவாறு தீர்ப்பளித்துள்ளது:

> "8. விசாரணையின்போது, ஆண்டுப் பட்டிகை வழக்கு எண் 123/2011-இல் காண்பிக்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்ட 11 பேரின் பெயர்களைத் தவிர, வேறு 20 நபர்களும் குற்றத்தில் ஈடுபட்டுள்ளனர் என்பதை ஐயப்பாட்டிற்கு இடமின்றி நிகழ்வுநிலை முறையீட்டாளர் தெரிவித்து, அவர் அந்த 20 நபர்களின் பெயர்களையும் தெளிவாகவே தெரிவித்திருந்தார். 11 பெயர் சொல்லப்பட்ட நபர்களுடன், மேலும் 20 நபர்கள் நிகழ்விடத்திற்கு வந்தனர், ஆயினும் அவர் அவர்களின் பெயர்களைக் குறிப்பிடவில்லை என அ.சா.2 தெரிவித்துள்ளார். குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தவிர, மேலும் 5 நபர்கள் நிகழ்விடத்திற்கு வந்தனர். ஆயினும், அவர் அவர்களின் பெயர்களைத் தெரிவிக்கவில்லை என அ.சா.3 கூறியுள்ளார். குற்றம்புரிந்த ஒருசில நபர்களின் பெயர்களை அ.சா.4 குறிப்பிட்டுள்ளார்.
>
> 9. 11 பெயர் சொல்லப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களைத் தவிர வேறுசில நபர்களும் குற்றம் புரிந்துள்ளனர் என்பது அ.சா.1 முதல் 4 வரையிலான சாட்சியங்களிலிருந்து தெள்ளத்தெளிவாகிறது மற்றும் கொடுமுடி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் சான்றையும், கு.வி.மு.ச., பிரிவு 319-இன் நோக்கத்தையும் பரிசீலிக்கத் தவறிவிட்டார். எனவே, ஆ.ப.வ. எண் 123/2011-இலுள்ள தற்போதைய குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களைத் தவிர, மேலும் 20 நபர்கள்/குற்றஞ்சாட்டப்- பட்டவர்களாகக் கருதப்பட்டவர்களும் வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளனர், ஆகையால், அவர்கள் குற்றஞ்சாட்டப்பட்டவர்களாக வரிசைப்படுத்தப்பட வேண்டும். இச்சூழ்நிலைகளின்கீழ் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரால் சார்வுறப்பட்ட, *(2017) 4* **சுப்ரீம் கோர் கேஸஸ்** *177,* **அம்ருத்பாய் உம்முபாய் படேல் -எதிர்- சுமன்பாய் காந்திபாய் படேல் மற்றும் பலர்** என்ற வழக்கின் தீர்ப்புரை, தற்போதைய வழக்கின் பொருண்மைகளுக்குப் பொருந்தத்தக்கதல்ல."

10. குற்றஞ்சாட்டப்பட்டவரை நீதிமன்றத்தில் நிறுத்தும்பொருட்டு, சட்டப்பிரிவு 319-இன் கீழ் அதிகாரத்தைச் செலுத்த தேவைப்படும் தீர்வுக்கூறினை, அவ்வழக்கின் சூழ்நிலைகள் அவ்வாறு கோரும் சந்தர்ப்பங்களில் மட்டுமே அரிதாகச் செயல்படுத்த வேண்டும் என வாதிடுவதற்கு மேல்முறையீட்டாளர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞர், **உறர்தீப் சிங் -எதிர்- பஞ்சாப் மாநில அரசு,** *(2014) 3* **எஸ்.சி.சி.** *92* என்ற வழக்கில் இந்நீதிமன்றத்தின் அரசமைப்பு நீதியராயத் தீர்ப்புரைமீது சார்ந்து நின்றார். நீதிமன்றம் முன்பு சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளிலிருந்து ஒரு நபருக்கு எதிராக உறுதியான மற்றும் தெளிவான சான்று அமைகிறபோதுதான், அத்தகைய அதிகாரமானது மேம்போக்கான முறையிலோ, துணிகரமான முறையிலோ அல்லாமல் செயற்படுத்தவேண்டும். நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்ப்பளித்தது:

> *"105.* கு.வி.மு.ச., பிரிவின் கீழான அதிகாரமானது தன்விருப்பப்படியானதும், தனிவகையானதுமான அதிகாரமாகும். இது வழக்கிற்கு தேவைப்படும் சூழ்நிலைகளில், அவ்வழக்குகளில் மட்டுமே அரிதாக செயற்படுத்த வேண்டும். ஏனென்றால், அக்குற்றத்தை வேறேதேனும் நபருங்கூட புரிந்திருக்கலாம் என்று நீதித்துறை நடுவரோ அல்லது அமர்வு நீதிபதியோ கருத்துரைக்கலாம் என்பதால் இதை செயற்படுத்தக்கூடாது. நீதிமன்றம் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளிலிருந்து ஒரு நபருக்கு எதிராக உறுதியான மற்றும் தெளிவான சான்று அமைகிறபோதுதான், அத்தகைய அதிகாரமானது மேம்போக்காகவோ, துணிகரமான முறையிலோ அல்லாமல் செயற்படுத்தவேண்டும்.
>
> *106.* இவ்வாறாக, முதல்நோக்கு வழக்கு மட்டுமே நீதிமன்றம் முன்பாக சமர்ப்பிக்கப்பட்ட சான்றுகளிலிருந்து நிலைநாட்டப்படவேண்டுமென்றாலும், குறுக்கு விசாரணை என்ற உரைகல்லின்மீது அச்சான்றினை சோதனை செய்யவேண்டிய அவசியமில்லை, குற்றத்தில் அவரின் பங்கிற்கான சாத்தியமிருந்தது என நாங்கள் தீர்மானிப்பதைவிட, அதனைத் தீர்மானிக்க மிக உறுதியான சான்றுதான் தேவைப்படுகிறது. அச்சோதனையானது குற்றச்சாட்டு வனையும் சமயத்தில் செயற்படுத்துவதைப்போன்று, முதல்நோக்கு வழக்கைவிட பிரயோகிக்கப்படவேண்டும். ஆனால், திருப்தியளிக்குமளவுக்கு இல்லாத சான்றானது மறுத்துரைக்கப்படாவிட்டால்,

அது குற்றவாளியென தீர்ப்பளிக்க வழிகோலும் என்பதாகும். அத்தகைய திருப்தியில்லாத நிலையில் நீதிமன்றம், கு.வி.மு.ச., பிரிவு 319-இன் கீழ் அதிகாரத்தைச் செலுத்துவதைத் தவிர்க்கவேண்டும். கு.வி.மு.ச., பிரிவு 319-இல் "குற்றஞ்சாட்டப்படாத நபர் எவரேனும் குற்றம் எதையேனும் செய்திருக்கிறார் என்பதாகச் சாட்சியத்திலிருந்து தெரியவருமாயின்" என வகைசெய்திருப்பதன் நோக்கமானது, அதற்காக "அந்த நபர் குற்றஞ்சாட்டப்பட்டவருடன் சேர்ந்திணையாக விசாரணை செய்யப்படவேண்டும்" என்ற வார்த்தைகளிலிருந்து தெளிவாகிறது. "அதற்காக அந்த நபர் குற்றவாளியென தீர்மானிக்கவேண்டும்" என்பதாக வார்த்தைகள் பயன்படுத்தப்படவில்லை. ஆகையால், குற்றஞ்சாட்டப்பட்டவரின் குற்றம் குறித்து ஏதொரு கருத்துரைப்பதற்கு, கு.வி.மு.ச., பிரிவு 319-இன் கீழ் நீதிமன்றம் செயற்படுவதற்கான வரம்பில்லை."

11. **லபுஜி அம்ரத்ஜீ தாகூர் மற்றும் பலர் -எதிர்- குஜராத் மாநில அரசு மற்றும் ஒருவர்** (குற்றவியல் மேல்முறையீடு எண் 1349/2018, 13.11.2018 அன்று முடிவு செய்யப்-பட்டது)-இல் இந்நீதிமன்றத்தின் அண்மைய உத்தரவையும் மேல்முறையீட்டாளருக்கான கற்றறிந்த வழக்குரைஞர் குறிப்பிட்டுள்ளார், அதில், 2012-ஆம் ஆண்டு பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டத்தின்பிரிவு 3 மற்றும் 4-இன்கீழ் குற்றமாகும் எந்தவொரு செயலும் மேல்முறையீட்டாளர்களால் செய்யப்பட்டதாக எந்த குறிப்புரையும் இல்லை என்ற காரணத்திற்காக சாட்சிக்கூண்டிலுள்ள ஒருசில சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையில் கூடுதலாக சேர்க்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணையிடும் உத்தரவானது நீக்கறவு செய்யப்பட்டது. இது கீழ்க்கண்டவாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது:

> "..... நீதிமன்றமானது அதன்முன் வந்திருக்கின்ற சான்றின் சாரத்தைப் பரிசீலிக்கவேண்டும் மற்றும் (மேற்கண்ட) **உறர்தீப் சிங்** என்ற வழக்கில் அரசமைப்பு நீதியராயத்தால் வகுக்கப்பட்டுள்ளவாறு சோதனையானது பிரயோகிக்கப்பட வேண்டும், அதாவது, "குற்றச்சாட்டு வனையும் சமயத்தில் செயற்படுத்துவதைப் போன்று முதல்நோக்கு வழக்கைவிட பிரயோகிக்கப்பட வேண்டும், ஆனால், திருப்தியளிக்குமளவுக்கு

இல்லாத சான்றானது மறுத்துரைக்கப்படாவிட்டால், அது குற்றவாளியென தீர்ப்பளிக்க வழிகோலும்" என்பதாகும்.....".

12. நாங்கள் தரப்பினர்களுக்கான கற்றறிந்த வழக்குரைஞரின் வாதங்களைக் கேட்டறிந்து, உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு சட்டப்படி நிலைநிறுத்தத்தக்கதல்ல என்பதைக் கண்டறிந்துள்ளோம். தற்போதைய வழக்கானது, திருமணஞ்சார்ந்த பிரச்சினையின் அடிப்படையிலானது, அதில் புகார்தாரரான கணவன், மனைவி மற்றும் அவருடைய மற்ற குடும்ப உறுப்பினர்களுக்கு எதிராக குற்றஞ்சாட்டியுள்ளார். 15 பெண்களும், 35 ஆண்களும் வாகனத்தில் வந்தனர் என புகார்தாரர் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டிருந்தாலும், 11 நபர்களின் பெயர்கள் மட்டுமே முதல் தகவல் அறிக்கையில் வெளியிடப்பட்டிருந்தன.

13. புலன்விசாரணையின்போது சட்டப்பிரிவு 161-இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்களில், புகார்தாரரும், அவருடைய சாட்சிகளும் மு.த.அ.-இலுள்ள 11 நபர்களின் பெயர்களைத் தவிர, வேறெந்த பெயரையும் வெளியிடவில்லை. இவ்வாறு புகார்தாரரின் வீட்டில் அத்துமீறி நுழைந்ததிலும் அல்லது அவரை மிரட்டியதிலும் அவர்களுடைய பங்கு இருந்தது என்பது குறித்து முதல்தர சாட்சியம் இல்லாத நிலையில், சட்டப்பிரிவு 319-இன் கீழ் விண்ணப்பத்தை தாக்கல் செய்கையில், மற்ற நபர்கள் பலரையும் தனக்காதரவாகச் சேர்த்துக்கொள்ளும்பொருட்டு வலைவீசி வந்துள்ளார். பெரும் எண்ணிக்கையிலான மக்கள் புகார்தாரரின் வீட்டிற்கு வந்திருக்கமாட்டார்கள், அப்படியே வந்திருந்தாலும் கடப்பாரை, கத்தி மற்றும் இரம்பம் போன்ற ஆயுதங்களை அவர்கள் கைகளில் வைத்துக்கொண்டிருந்ததாக சொல்லப்பட்டுள்ளதால், காயம் ஏதும் ஏற்படுத்தாமல் திரும்பியிருக்கமாட்டார்கள்.

14. முதல் தகவல் அறிக்கையிலோ அல்லது சட்டப்பிரிவு 161-இன்கீழ் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்திலோ, மேல்முறையீட்டாளர்களின் பெயர்கள் அல்லது அவர்களை அடையாளம் காணும்பொருட்டு மற்ற விவரங்கள் ஏதும் கொடுக்கப்பட-வில்லை. முதல் தகவல் அறிக்கையில் இருக்கும் குற்றச்சாட்டுகள் தெளிவற்றுள்ளன மற்றும் முதல் தகவல் அறிக்கையில் அந்நபரை அடையாளம் காணும் விவரங்கள் இல்லாததால், எந்நபரையும் எப்போதுவேண்டுமென்றாலும் சேர்த்துக்கொள்வதற்காக அதைப் பயன்படுத்திக்கொள்ளமுடியும். கூடுதலாக சேர்க்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் எந்த கிராமங்களை சேர்ந்தவர்கள் என்பது தொடர்பாக உறுதிக்கூற்று ஏதுமில்லை.

ஆகையால் (மேற்கண்ட) **உறர்தீப் சிங்** என்ற வழக்கின் தீர்ப்புரையின் கருத்தில் கொண்டு, இ.த.ச., பிரிவுகள் 147, 448, 294(பி) மற்றும் 506 கீழான குற்றங்களுக்காக மேல்முறையீட்டாளர்களை விசாரணைக்குட்படுத்த உறுதியான அல்லது தெளிவான சான்றேதுமில்லை. உறுதியான மற்றும் தெளிவான சான்றில்லாத நிலையில், மேம்போக்காகவோ மற்றும் துணிகரமான முறையிலோ சட்டப்பிரிவு 319-இன்கீழ் கூடுதலாக சேர்க்கப்பட்ட குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணை விடுக்கமுடியாது. சான்றானது முதல்நோக்கு வழக்கைவிட அதிகமானதாக இருந்து, குற்றச்சாட்டு வனையும் சமயத்தில் தேவைப்படுவதைப்போல விசாரணை முடிந்து குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு தண்டனையளிக்கும் சமயத்தில், அதை நிறைவுசெய்ய தேவைப்படுவதைவிட குறைவாக இருக்கிறதென்றால்தான் சட்டத்தின்பிரிவு 319-இன்கீழ் குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு அழைப்பாணையிடமுடியும்.

15. புகார்தாரரால் விசாரிக்கப்பட்ட ஒருசில சாட்சிகளின் வாக்குமூலங்களின் அடிப்படையில் கற்றறிந்த நீதித்துறை நடுவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை மட்டும் உயர் நீதிமன்றம் நீக்கறவு செய்தது. மேல்முறையீட்டாளர்களின் பெயர்களை வெளிப்படுத்தியிருப்பதாலேயே, குறிப்பாக, புகார்தாரர் கணவராக இருக்கும்பட்சத்தில், அவரின் மனைவி வீட்டார்மீது குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்கும்போதோ, முதல் வாய்ப்பிலேயே அவர்களுடைய பெயர்களையோ அல்லது மற்ற அடையாளங்களையோ வெளிப்படுத்தாதபோது, அது, சட்டத்தின் பிரிவு 319-இன் கீழான குற்றத்திற்காக அவர்களை விசாரணைக்குட்படுத்தும் உறுதியான மற்றும் தெளிவான சாட்சியமாக சொல்லமுடியாது.

16. அதன்விளைவாக, கற்றறிந்த உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு நீக்கறவு செய்யப்படுகிறது மற்றும் விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவு மீட்டளிக்கப்பட்டு, சட்டத்தின் பிரிவு 319-இன் கீழான விண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுகிறது. மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

மாண்புமிகு நீதியரசர் டாக்டர் தனஞ்ஜெயா ஒய். சந்திரசூட்

மாண்புமிகு நீதியரசர் திரு. உேறமந்த் குப்தா

புதுடெல்லி,
14.03.2019

நிபந்தனை

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துக்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட பயன்பாட்டிற்கேயன்றி, வேறு எந்த நோக்கத்திற்கும் பயன்படுத்தப்படமுடியாது. நிறைவேற்றுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்ற அனைத்து நடைமுறைசார் மற்றும் அதிகாரப்பூர்வசார் நோக்கங்களுக்கும், தீர்ப்புரையின் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."